## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 335. தலைப்பு:"நம்முடைய சோதனையான கால கட்டம்"

*நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் உள்புற தேடல் புத்தகம் பக்கம் 8-12 லிருந்து தேர்வு செய்யப்பட்ட வினா விடை பகுதி*

கேள்வி: நமக்கு வாழ்க்கையில் பிரச்சனைகள் சவால்கள் இவையெல்லாம் வருவதற்கு காரணம் நமக்கே தெரியாமல் நம்மிடம் உள்ள குறைகளால்தான்.அது போன்ற சவால்களை எதிர்கொள்ளவும் கடந்து சென்று விடுபடவும் சிறந்த வழி எது?

பதில்:இதை நான் இரண்டு கோணத்தில் பார்க்கிறேன்.
ஒரு செயலை சங்கடங்கள் தடைகளையும் மீறி செய்வதென்பது ஒரு சவால்தான்.அதில் உழைப்பு வலி அபாயங்களை எதிர் கொள்ள நேரிடலாம்.
அதற்கு இலக்கு இருக்கிறது.சவாலை எதிர் கொள்வது என்பது ஓர் நேர்மறை அறிகுறி.ஏனென்றால் அப்போது தான் அவருடைய திறமைகள் வெளிப்படுகின்றன.தன்லமில்லாத உலக நன்மைக்காக பரிசுத்தமான செயல்களை முன்னெடுக்கும் போது சவால்கள் கடுமையாகத்தான் இருக்கும்.
யேசு கிறிஸ்து மனிதர்களை பாவத்திலிருந்து விடுவிக்க கடுமையான சவால்களை எதிர் கொண்டார்.இறுதியில் தன்னையே சிலுவையில் அறைய அனுமதித்தார்.மனிதர்கள் செய்கின்ற தீய செயல்களின் விளைவுகளை புரிய வைத்து அவர்கள் அதனை விட்டொழிக்கும் படி செய்தார்.
ஆப்ரஹாம் லிங்கனும் மகாத்மா காந்தியும் அரசியல் ரீதியான சவால்களை எதிர் கொண்டார்கள்.பல்வேறு அவமானங்களையும் மீறி பெரிய தலைவர்கள் ஆனார்கள்.அன்னை தெரசாவோ தொழுநோயாளிக்கும் ஆனாதைகளுக்கும் தொண்டு செய்தார்.அதுவும் பெரிய சவால்தான்.
நம் ஸ்வாமி சொல்கிறார் நாம் துணிவுடன் செயல்பட்டால் அது உறுதியான முடிவுக்கு நம்மை இட்டுச் செல்லும் என்கிறார்.துணிவு இல்லாமல் போய்விட்டால் அது வன்முறையில் கூட போய் முடியலாம். நாம் கோபத்தில் குரலை உயர்த்தி பேசும் போது காரணத்தை புரிந்து கொண்டு பேச வேண்டும்.அது அன்பினால் இல்லாமல் கோபத்தினால் என்றால் விளைவுகள் மோசமாக இருக்கும்.

அடுத்த கேள்வி:குழப்பமான இன்றைய வாழ்க்கை சூழலில் மேம்பட்ட உலகை பெற நாம் கையாள வேண்டிய வழி முறை என்ன.

பதில்:எல்லாமே சரியாக சென்று கொண்டிருக்கிறது என நினைக்காமல் எங்கேயோ தவறு நடந்து விட்டது என புரிந்து கொண்டால் அதுவே சிறப்பானது.நாம் குழம்பிய நிலையில் இருக்கிறோம் என்பதில் குழப்பமில்லாமல் இருந்தாலே நல்லது தான்.வாழ்க்கை என்பது இருப்பதை வைத்து நடத்துவதுதானே.
இன்று உலகியல் வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கை இரண்டும் எதிரெதிராக இருக்கின்றன.

உலகியல் வாழ்க்கையோ அனைத்தும் எனக்கே சொந்தம் என சொல்லி செல்வங்களை சுயநலத்திற்காக பெருக்கி கொண்டே போகச்சொல்கிறது.ஆன்மீக வாழ்க்கையோ அனைத்தையும் துறந்து விடு.எதுவும் நிலையல்ல.நிலையான இறையை மட்டும் பற்றி கொண்டு மற்ற அனைத்தையும் துறந்து விட சொல்கிறது.
இங்கே தான் நமக்கு குழப்பமே வருகிறது.மரத்தின் வேர் பூமிக்கு அடியில் இருக்கிறது
பழம் மேலே இருக்கிறது.
வேர் என்பது உலகியல் வாழ்க்கை
பழம் ஆன்மீக வாழ்க்கை.அவை இரண்டுமே மரத்தின் இரண்டு பகுதிகள்தான்.
பழத்தை சுவைக்க வேண்டும் என்றால் வேர்கள் நிலத்தில் நன்கு ஊடுருவி நிற்க வேண்டும் அல்லவா.
குழப்பம் நீங்க வேண்டும் என்றால் உலகியல்- ஆன்மீகம் இரண்டுக்குமான சம நிலையை கண்டறிய வேண்டும்.
ஆன்மீகம் என்றால் உலக வாழ்க்கையின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை கைவிட்டு விட்டு ஓடி ஒளிவதல்ல.
அது போல் உலகியல் வாழ்க்கையில் பார்க்கின்ற அனைத்தையும் அனுபவித்து தீர்த்துவிட வேண்டும் என்பதும் விபரீதமானதாகும்.அதனால் தான் உலகின் பெரும் பணக்காரர்களான பில் கேட்ஸ் போன்றவர்கள் பொது நன்மைக்காக பெரும் நன்கொடை அளிக்கின்றார்கள்.எனவே குழப்பத்தை தீர்பதற்கான சம நிலையை நாம் அடையாளம் கண்டு கொண்டாலே எல்லாம் சரியாகிவிடும்.

கேள்வி:ப்ராணன் எனப்படுகின்றஉயிர் சக்திக்கு மதம் ஏதும் இல்லை என கூறப்படுவது சரியா.

பதில்:
நாம் யாருமே பிறக்கும் போதே மதம் என்ற ஒன்றை கையில் பிடித்து கொண்டே பிறக்கவில்லை.நம் உடலுக்கோ மூச்சு காற்றுக்கோ ஹிருதயத்திற்கோ மதம் கிடையாது.
மதம் என்பது கோத்ரெஜ் பீரோ,பிரிட்டானியா பிஸ்கட்,நியூட்ரின் சாக்லெட் போல ஒரு அடையாளம் மட்டுமே.அது வெளியிலிருந்து திணிக்கப்பட்டதாகும்.ஆனால் மதத்தை பின்பற்றுவதென்பது மதம் கூறும் நல்லொழுக்கங்களை கடைபிடிப்பதாகும்.அதுவே நம்முடைய பண்பாடு ஆகும்.அது பல காலங்களாக நமது ரத்தத்திலுள்ளே ஊறி இருப்பதாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் இது போன்ற கலந்துரையாடல்களை கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்